**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - 2022**

**------------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால்

அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 61 ஆவது பந்தி மற்றும் நியம இலக்கம் 08 இற்கு இணங்க முழுமையாக பெறுமதி பூச்சியமான ஆனால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் கூட்டுத்தொகை ரூபா 148,590,605 தொகை பெறுமதியான ஆதனங்கள் பொறித்தொகுதிகள், உபகரண விடயங்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டு சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து பயன்தரு ஆயுட்காலத்தை மீண்டும் மீளாய்வு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம் இலக்கம் 07 இன் 31 ஆவது பந்திக்கு இணங்க, மீளாய்வாண்டின் வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | 2023 ஆண்டில் வட்டி மூலம் கிடைக்கும் காசுப் பாய்ச்சலை வேறாக வெளிப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்காக முறையே கிடைத்திருந்த ரூபா 42,853,000 தொகை மற்றும் ரூபா 40,000,000 தொகை என கிடைத்த அரச மூலதன மானியம் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 20 இன் 28 ஆம் பந்திக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 ஆண்டு கிடைத்திருந்த மானியங்கள் வருவாய் செலவுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | நியமத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தீர்க்கப்பட்டிருக்காத முற்பண மீதி ரூபா 241,084 தொகை எனினும், முற்பணப் பதிவேட்டின் படி அப்பெறுமதி ரூபா 491,825 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 250,741 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. முற்பணக் கணக்கு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற்றிருந்த மீதிகள் தவறுதலாக முற்பணப் பதிவேட்டில் ஜனவரி மாதத்தில் பதிவு செய்யப்பட்டமையால் இந்த தவறு ஏற்பட்டிருந்தது. | அட்டவணைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களிடையே மீதிகள் சமனாக இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 செப்தம்பர் 01 திகதி குத்தகை உறுதியொன்றின் மூலம் 20 வருட காலப் பகுதிக்காக சிறப்பு அங்காடி தொடர் கட்டிடம் ஒன்றிற்காக ரூபா 1,014,090,300 தொகை பெறுமதிக்கு கட்டிடம் ஒன்று குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், இந்த குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக கணக்காய்வின் கணித்தலின் படி முற்பணத் தொகை மற்றும் குத்தகை வருமானம் முறையே ரூபா 69,600,000 தொகை மற்றும் ரூபா 7,500,000 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அப் பெறுமதி முறையே ரூபா 61,043,478 தொகை மற்றும் ரூபா 6,521,739 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 9,534,783 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | **முற்பணத் தொகை**<br>முற்பணத் தொகையை கணிக்கும் போது திசெம்பர் மாதம் ரூபா 600,000 தொகை முற்பணக் கணக்கிலிருந்து வருமானத்திற்கு பெற்றிருக்கவில்லை. அந்த தவறினை 2023 பெப்ரவரி மாதம் சரி செய்யப்பட்டுள்ளது. மீதியான வித்தியாசத்திற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது பெறுமதி கூட்டிய வரித் தொகையாகும்.<br><br>**குத்தகை வருமானம்**<br>குத்தகை வருமானத்திலிருந்து 15% வரியொன்று ஒதுக்கப்பட்டிருந்தமையால் ரூபா 978,261 தொகை வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. குத்தகையுடன் வரித்தொகையொன்று உடன்படிக்கையில் கணிக்கப்பட்டிருக்காமையால் இவ்வாறு சீராக்கல் மேற்கொள்ள நேரிட்டது. | அட்டவணைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கிடையே மீதிகள் சமமாக இருக்க வேண்டும். |
| (இ) | ஒலிபரப்பு நிலையமொன்று நடாத்திச் செல்வதற்காக 2009 ஆண்டில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த திருகோணமலை குச்சவேலி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சுமார் 119.5309 ஹெக்டயர் காணிக்காக 2021 திசெம்பர் 31 திகதி வரை செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 153,860,000 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 127,795,000 தொகையினை பதிவழிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 26,065,000 தொகை செலுத்த வேண்டியிருந்ததுடன், 2022 ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 9,420,000 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி திருகோணமலை, குச்சவேலி பிரதேச செயலகத்திற்குரிய காணிக்காக செலுத்த வேண்டிய குத்தகையினை கணிக்கீடு செய்திருக்கவில்லை. அதனை கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செலவுகளை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புறக்கணிக்கப்பட்ட வரிகளை சேகரிக்கும் அலகின் அறிக்கை மற்றும் கூட்டுத்தாபனத்தின் வரி செலுத்துதல் தொடர்பாக வரிக் கணக்கின் படி | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. 2023 ஆண்டில் இந்தத் தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதி காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த வரிப் பொறுப்பு ரூபா 213,349,232 தொகை (தண்டப்பணம் இன்றி) ஆக காணப்பட வேண்டியிருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் நிதி அல்லாத பொறுப்புக்களின் கீழ் அது ரூபா 180,091,971 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் செலுத்த வேண்டிய நிலுவை வரிப் பெறுமதி ரூபா 33,257,261 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ஒலிப்பரப்புக் கால கடன்பட்டோரின் ஆரம்ப மீதியாகிய ரூபா 21,108,283 தொகை மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18,039,450 இற்கான மீதியிடையே ரூபா 3,068,825 இற்கான வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்தது. | 2021 ஆண்டின் கடன்பட்டோர் அட்டவணையில் ஏற்பட்டிருந்த தவறொன்றாகும். 2022 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடன்பட்டோர் அட்டவணை சரியானது. | அட்டவணைகள் மற்றும் நிதிக் கூற்றுக்கள் இடையே மீதிகள் சமமாக இருக்க வேண்டும். |
| (ஊ) | நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ஒலிபரப்புக் கால கடன்பட்டோர் கூட்டுப் பெறுமதி ரூபா 281,690,050 தொகைக்காக ரூபா 137,435,663 தொகை ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் ஏனைய கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெற வேண்டிய வருமானம் தொடர்பாக ரூபா 13,485,732 தொகைக்காக அறவிட முடியாக் கடன் மற்றும் ஐயக் கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை 2023 ஆண்டு முதல் அனைத்து கடன் பட்டோருக்காக ஐயக்கடன் ஒதுக்கப்படும். | அனைத்து கடன்பட்டோருக்காக அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் ஒதுக்குதல் தொடர்பாக கவனம் செலுத்துதல் பொருத்தமானது. |
| (எ) | ஒலிபரப்பு நிலையமொன்று நடாத்துவதற்காக குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 0.3194 ஹெக்டயார் தொடர்பாக சட்டமா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த செய்முறையின் படி 1995 முதல் 2017 திசெம்பர் 31 திகதி வரை செலுத்த வேண்டிய குத்தகை ரூபா 10,969,208 தொகை மீளாய்வாண்டு வரை கணக்கீடு செய்திருக்கவில்லை. 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகள் | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. நிதி நிலைமை சீரற்று காணப்பட்டமையால் செலுத்த முடியவில்லை. | சொத்துக்கள், பொறுப்புக்ள் சரியாக கணக்கீடு செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பாக கணக்கீடு செய்திருந்த செலுத்த வேண்டிய குத்தகை ரூபா 6,075,000 தொகை 2023 மே 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | | |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களின் படி 2022 ஆண்டிற்குரிய அட்டுறுச் செலவு ரூபா 2,738,026 தொகை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2022 கணக்காண்டு தொடர்பாக 2023.01.10 அளவில் கிடைத்திருந்த அனைத்து செலவுகளும் அட்டுறுச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 322,659,847 தொகை ஒன்று 2022.12.31 திகதியில் உள்ளவாறு அட்டுறுச் செலவுகள் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் குறிப்பிட்ட காலப் பகுதியின் பின்னரே நிதிப் பிரிவிற்கு கிடைத்திருந்தது. | அட்டுறுச் செலவுகள் சரியாக கணக்கீடுகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்களில் மோட்டார் வாகனங்களின் திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 53,863,675 தொகை ஆக காணப்பட்டதுடன், 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதி ரூபா 52,786,363 தொகையாகும். அதன்படி, மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு எண்ணிக்கை ரூபா 1,077,313 தொகை ஒதுக்க வேண்டியிருந்த போதிலும், அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு 2023 ஆண்டில் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமானத் தேய்வு ஒதுக்கம் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஒ) | தென்மராட்சி நாவட்குழி என்ற இடத்தில் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான விற்பனவு நிலையக் கட்டிடம் யாழ் எப்.எம். சேவைக்காக கொள்வனவு செய்வதற்காக 03 தவணைகளில் அதாவது 2022 ஏப்ரல் 15 திகதி ரூபா 2 மில்லியன் தொகையும் 2022 மே 15 திகதி ரூபா 1.5 மில்லியன் தொகையும் மற்றும் 2022 ஜூன் 15 திகதி ரூபா 1.5 மில்லியன் தொகையும் என ரூபா 5 மில்லியன் செலுத்துவதற்கு 2022 பெப்ரவரி 25 திகதி உடன்படிக்கை | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | கட்டிடங்களின் மீதி, கடன் கொடுத்தோர் மீதி மற்றும் வட்டித் தொகை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டிருந்தது. அவற்றில் 2022 நவம்பர் 03 திகதி ரூபா 2 மில்லியன் செலுத்தியிருந்ததுடன், மீதித் தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி, கட்டிடங்களின் மீதி ரூபா 3 மில்லியன் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 3 மில்லியன் மற்றும் தாமதத்தின் காரணமாக அறவிடப்படும் வட்டி ரூபா 680,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படாமையால் திருகோணமலை ஒலிபரப்பு நிலையத்தில் கடமையாற்றுபவர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய ரூபா 12,714,678 தொகை அனுப்பப்படாமையால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்தத் தொகையை செலுத்தும்படி 2021 ஜனவரி 17 திகதி நீதிவான் நீதிமன்றத்தினால் கட்டளை இடப்பட்டிருந்த போதிலும், அந்தப் பொறுப்பு தொடர்பாக கணிப்பீடு ஒன்று பொருத்தமான முறையில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. கூட்டுத்தாபனத்தினால் மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையால் ஒதுக்கம் மேற்கொள்ளப்படவில்லை. | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2023 ஆண்டிற்கான ரூபா 1,565,604 தொகை செலவு மீளாய்வாண்டின் செலவுகள் என காட்டப்பட்டிருந்தது. | உறுதிச் சீட்டிலக்கம் pay-1388-12 மற்றும் pay-1274-12 இன் கீழ் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் சரியானது. ரூபா 658,350 இற்கான வீதவரியாக செலுத்திய செலவு 2023 ஆண்டு முதலாம் காலாண்டிற்குரிய செலவொன்றாகும். அந்தச் செலவு 2022 ஆண்டிற்குரியதல்ல. அதன்படி, இந்தக் கணக்கீடு செய்தல் அனைத்தும் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செலவுகள் குறிப்பிட்ட ஆண்டிற்கு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி ரூபா | வித்தியாசம் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | **அபிவிருத்தி லொத்தர் சபை** | | | | | |
| | கடன் பட்டோர் மீதி | 18,192,625 | 13,758,998 | 4,433,627 | இந்த கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை பரிசோதனை செய்து சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி நேரொத்த அறிக்கையின் படி பெறுமதியுடன் சமனாக இருக்க வேண்டும். |
| | கடன் கொடுத்தோர் மீதி | 1,939,040 | மீதி இல்லை. | 1,939,040 | | |
| | **தேசிய லொத்தர் சபை** | | | | | |
| | கடன் பட்டோர் மீதி | 6,514,210 | மீதி இல்லை. | 6,514,210 | | |
| | கடன் கொடுத்தோர் மீதி | 565,573 | மீதி இல்லை. | 565,573 | | |
| (ஆ) | இருப்பு | 31,400,885 | 29,405,407 | 1,995,478 | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. 2023 ஆண்டில் கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி நேரொத்த அறிக்கையுடன் இணக்கஞ் செய்ய வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய வைப்புக்களின் மீதி | 9,242,462 | 9,287,782 | 419,680 | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களின் படி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு இந்த மீதிகள் தொடர்பாக அறிக்கையொன்று அழைக்கப்பட்டுள்ளது. அதன் தீர்மானத்தின் படி இந்த மீதி 2023 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்பு மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | காணிகள் | 7,574,763 | உரித்துறுதிகள், பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாதல் அறிக்கைகள். | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சொத்துக்களின் உரிமை மற்றும் உளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கட்டிடங்கள் | 433,223,877 | நிலைவான சொத்துக்கள் பதிவேடு, பெறுமதியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் பௌதீக மெய்மையாதல் அறிக்கைகள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சொத்துக்களின் உரிமை மற்றும் உளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பத்திரிகை நிறுவனத்தில் பங்குகளில் முதலீடு | 1,000,000 | பங்குச் சான்றிதழ் | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | மீதிகளை உறுதிப்படுத்துவற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | தடுத்து வைத்தல் வரி | 23,232,695 | தடுத்து வைத்தல் வரிச் சான்றிதழ் | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | உளமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒலி பரப்புக் காலம் கடன்பட்டோர் மீதி ரூபா 281,690,050 தொகையாக இருந்ததுடன், அவற்றில் 10 வருடங்களை மிகைத்திருந்த உள்நாட்டுக் கடன் பட்டோர் ரூபா | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. 1974 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்ய முடியாது. மீதிகளை பதிவழிப்பதற்கான நடவடிக்கை | அறவிடப்பட வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31,873,561 தொகை மற்றும் வெளிநாட்டுக் கடன் பட்டோர் ரூபா 63,114,642 தொகை காணப்பட்டது. இந்த மொத்த ஒலி பரப்புக்கால கடன் பட்டோர் மீதியில் 34 சதவீதம் ஆகும். இந்த வெளிநாட்டுக் கடன் பட்டோர் மீதியில் இனங்காண முடியாத ரூபா 35,301,041 தொகைக்கான மீதியொன்று அடங்கியிருந்தது. | எடுக்கும் படி அரசாங்க தொழில் முயற்சிகள் பற்றிய குழுவினால் அறிவுரை வழங்கப்பட்டது. அதன்படி, நிதிப் பிரிவு விற்பனைப் பிரிவு மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு குழுவொன்று நியமனம் செய்து பதிவழிக்கப்பட வேண்டியவை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு கூட்டுத்தாபனச் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | சேவை இடை நிறுத்தப்பட்டிருந்த நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளி என இனங்காணப்பட்ட உத்தியோத்தர் ஒருவருக்கு செலுத்திய ரூபா 954,664 தொகை அரைச் சம்பளம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேணடிய உத்தியோகத்தர்களை இனங் கண்டிருந்த போதிலும் இந்த பணத்தை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக இது வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. நிதி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி கூட்டுத்தாபன சபைத் தீர்மானம் வழங்கியிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 64,055,395 தொகை பெறுமதியான பெற வேண்டிய ஏனைய வருமான மீதியில் அடங்கியுள்ள 2 வருடங்கள் முதல் 11 வருடங்கள் வரை பழமையான கூட்டுப்பெறுமதி ரூபா 10,106,956 தொகைக்கான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் கூட்டுத்தானத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | பழைய கடன் பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 35 வருடங்களை விட கூடிய காலம் முதல் முன்கொண்டு வந்து காணப்படும் ரூபா 238,952 தொகைக்கான மிகையாக செலுத்திய ஊழியர் சேமலாப நிதி மீதியொன்று 2023 மே 31 திகதி அளவிலும் கூட்டுத்தாபனத்திற்கு தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சேமலாப நிதி மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 13,187,918 தொகைக்கான பலவின கடன் பட்டோர் பெறுமதியில் அடங்கியுள்ள 02 வருடங்களுக்கும் 21 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் கடந்துள்ள ரூபா 4,829,121 தொகைக்கான பலவின கடன்பட்டோர் மீதியை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் கூட்டுத்தாபனத்தினால் | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | பலவின கடன் பட்டோர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 281,690,050 தொகையில் 3 வருடங்களை விட மிகையான அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 115,771,219 தொகையாக காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | கடன் பட்டோர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) 2022 திசெம்பர் 31 திகதி ரூபா 1,005,482 இற்கான மதிப்பளிக்கப்படாத காசோலைகளில் ஏப்ரல் 30 திகதி அளவில் ரூபா 85,000 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. இந்த மீதித் தொகையாகிய ரூபா 920,482 தொகையினை அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | மதிப்பளிக்கப்படாத காசோலைகளின் பணம் அறவீடு செய்வதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் அடங்கிய தொலைத் தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய 1981 முதல் 2016 ஆண்டு வரையான காலத்துக்குரிய கூட்டுத்தொகை ரூபா 149,420,035 தொகை 40 வருட காலம் முதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டதுடன், தொலை தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் படி அந்த மீதி ரூபா 145,614,269 தொகையாகும். செலுத்த வேண்டிய அந்த மீதி 2023 மே 31 திகதி அளவிலும் தீர்த்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | நீண்ட காலமாக காணப்படும் அட்டுறுச் செலவுகளுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.3 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 9.1 மூலம் திருத்தப்பட்ட நி.பி. 371(2)(ஆ) மற்றும் 371(5) படி மீளாய்வாண்டில் 155 சந்தரப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 6,031,660 தொகை பெறுமதியான முற்பணங்களை தீர்க்கும் கருமம் பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களை | ரூபா 5,300 இற்கான முற்பணம் 2023 முதல் காலாண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>முற்பணங்கள் தீர்க்கும் போது சுற்றறிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட காலப் பகுதியுள் தீர்க்க முடியாமைக்கு அந்த கருமங்களின் தன்மை மற்றும் | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகைத்து 11 நாட்களுக்கும் 714 நாட்களுக்கும் இடைப்பட்ட தாமதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இலங்கை பூராகவும் பரந்துள்ள பிராந்திய சேவை மற்றும் ஒலிபரப்பு நிலையங்களுக்காக வழங்கப்படும் முற்பணங்கள் தலைமை அலுவலகத்தினூடாக மாத்திரம் மேற்கொள்ளப்படுவதனாலே ஆகும். | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 9.1 மூலம் திருத்தப்பட்ட நி.பி. 371(2)(ஆ) மற்றும் 371(5) படி பதவிநிலை தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 இற்கான உச்ச அளவு வரை நிமித்தக் கட்டுநிதி வழங்க முடியுமாக இருந்த போதிலும், 21 சந்தர்ப்பங்களிலும் அந்த வரையறையை மிகைத்து கூட்டுத்தொகை ரூபா 4,643,500 இற்கான முற்பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கருமங்களின் தன்மையின் படி வரையறையை மிகைத்து முற்பணங்கள் வழங்க நேரிடுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றதுடன், அதற்காக தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் விஷேட அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பதவி நிலை அறிவித்தல் இலக்கம் : எஸ்.எல்.பீ.ஸீ/3142 இன் 04 ஆவது பிரிவின் படி ஏதேனும் உத்தியோகத்தர் ஒருவர் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் முற்பணம் வழங்கப்படக் கூடாது எனினும், அதற்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது 26 உத்தியோகத்தர்களுக்கு 126 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட முற்பணம் ரூபா 5,082,646 தொகை தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. | 13 வானொலி அலைவரிசைகள் காணப்படல், 11 பிராந்திய ஒலிபரப்பு நிலையங்கள் காணப்படல், 7 பிராந்திய சேவைகள் காணப்படல் காரணமாக நிலைவேற்றுத் தர உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் முற்பணங்கள் வழங்குவதற்கு முடியுமாக இருந்தமையால் மற்றும் கருமங்களின் தன்மையின் படி முற்பணங்கள் வழங்கக்கூடிய உத்தியோகத்தர்கள் வரையறையாக இருப்பதனால் இவ்வாறு முற்பணங்கள் வழங்குவதற்கு நேரிட்டுள்ளது. இவ்வாறு முற்பணங்கள் வழங்கப்படாவிடின் நிறுவனத்தின் செயற்பாட்டுக் கருமங்களில் தாக்கம் ஒன்று ஏற்படுகின்றது. வழங்கப்பட்ட அனைத்து முற்பணங்களும் தீர்த்துக்கொள்வதற்காக முறையான கணக்கீட்டு கட்டுப்பாட்டு செய்முறையொன்று கடைபிடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | எழுத்துமூல ஆலோசனையின் படி செயற்பட்டு அரசாங்கப் பணம் முறையான முகாமைத்துவத்துடன், கையாள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) முற்பணங்கள் வழங்கப்படும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு அதற்குரிய முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 182,900 தொகையான பெற்றுக்கொண்ட முற்பணங்கள் செலவிடப்படாமல் மீண்டும் தீர்க்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | முற்பணங்கள் வழங்கும் போது தேவைப்பாட்டினை இனங்கண்டு வழங்க வேண்டும். | |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 396(ஈ)(i) மற்றும் (iii) | 2022 திசெம்பர் 31 திகதி அளவில் செல்லுபடியாகும் காலம் 06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 604,539 தொகை பெறுமதியான 13 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது இது சரி செய்யப்பட்டுள்ளது. | 06 மாதங்களை மிகைத்துள்ள காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ)(i) மற்றும் (iii) இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாத இறுதியிலும் காணப்படும் கொடுக்கல் வாங்கல் நிலைமை தொடர்பாக தொடர்ந்து வரும் மாதங்கள் 15 திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக் கூற்றொன்று தயாரித்து நிதிப் பிரமாணம் 395(ஆ) இற்கு இணங்க அந்த வங்கி இணக்கக் கூற்று கணக்காய்வு மேற்கொள்வதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்க வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தில் 08 வங்கிக் கணக்குகளில் ஜனவரி முதல் செம்தம்பர் வரை வங்கி இணக்கக் கூற்று விதிக்கப்பட்ட | அனைத்து வங்கி இணக்கக் கூற்றுகளும் தயாரிக்கப்பட்டு மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. மென் பிரதியை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தினத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 திகதிய நிதியமைச்சின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல் | சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் நிச்சயிக்கப்பட்ட கால இலக்குகள் காட்டப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | வழிகாட்டலின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் : 01/2020 இல் ''பொது நிதி மற்றும் திறைசேரி செயற்பாட்டுச் சுற்றறிக்கை பயன்படுத்துவதற்கு வசதியான முறையில் தொகுத்தல்'' என்ற சுற்றறிக்கையின் II பகுதியில் 6.2 | கூட்டுத்தாபனத்தினால் 10 சந்தர்ப்பங்களில் 90 நாட்களின் மிகைத்த காலத்துக்காக நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்புக்குரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியது குறிப்பிட்ட கருமம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அமைச்சுச் செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் மீது என்ற போதிலும் கூட்டுத்தாபனத்தினால் சாட்டுதல் அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 07 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஆண்டு செப்தம்பர் மாதம் வரை மாத்திரம் ரூபா 2,424,937 இற்கான தொகையொன்று கருமம் நிறைவேற்ற முன்னர் மாதாந்தம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்கள் (2)502 இற்கு இணங்க அதன் II பிண்ணினைப்பு | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. 2023 ஆண்டு முதல் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2021 நவம்பர் 16 திகதிய நிதியமைச்சின் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலில் 6.7 இன் படி | நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியத்திற்காக வருடாந்த சொத்துக்கள் மெய்மையாதல் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபன நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியம் தொடர்பாக 2022 ஆண்டிற்காக அவ்வாறான கணிப்பீடொன்று கணக்காய்வுத் திகதி வரை மேற்கொண்டிருக்கவில்லை. | களஞ்சியங்களுக்கான வருடாந்த சொத்துக்கள் மெய்மையாதல் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலையான சொத்துக்கள் தொடர்பாக 2022 வருடாந்த மெய்மையாதல் சுமார் 60% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பொருண்மையாக வெளி சேவைகள் மற்றும் 17 ஒலிபரப்பு நிலையங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் 58 உப அலகுகளின் நிலையான சொத்துக்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்காக ஏனைய பிரிவுகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதுடன், கணிப்பீட்டிற்காக கணிசமான காலம் ஒன்று எடுத்தல் இங்கு வரையறைக் காரணியொன்றாக இனங்காணப்பட்டுள்ளது. | செயற்பாட்டுக் கைநூலில் 6.7 ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 2.3 | கணக்காண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் திட்டமுறைசார் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சுச் செயலாளர் ஊடாக திறைசேரி செயலாளர் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் 1(உ) இற்கு இணங்க | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு விதிக்கப்பட்ட கால வரையறைக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிப்பதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தில் 2 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2023 ஜூன் 30 திகதி வரை பதில் வழங்கியிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்க வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆண்டுக்கு முன்னர் இருந்து காணப்படும் மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 56,282,019 இற்கான தொகையொன்று காணப்பட்டதுடன், அதற்காக 2.5 சதவீதத்தை விட குறைவான வட்டி வீதத்தின் கீழ் ரூபா 2,133,619 இற்கான வட்டியொன்று கிடைத்திருந்தது. மேலும், கூட்டுத்தாபனத்தில் பிரதான நடைமுறைக் கணக்கில் (2323265) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கிக் கூற்றின் படி ரூபா 51,726,039 தொகைக்கான மேலதிக பற்று மீதியொன்று காணப்பட்டதுடன், அதற்காக அறவிடப்பட்டிருந்த வட்டி ரூபா 4,679,352 தொகையாகும். கூட்டுத்தாபனத்தின் பணம் 2.5 சதவீதத்தை விட கூடுதலான வட்டி சதவீத்தின் கீழ் முதலீடு செய்வற்கு கவணம் செலுத்தப்படாமை அல்லது வங்கி மேலதிக பற்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பெறக் கூடிய வட்டி வருமானத்தை விட ரூபா 2,545,733 தொகை மேலதிக பற்று வட்டி அதிகரித்திருப்பதனால் நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. மேலும், 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து காணப்படும் நேஷன் டிரஸ்ட் வங்கியின் நடைமுறைக் கணக்கிலும் உச்சமட்ட | மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கில் காணப்படும் பணம் கூட்டுத்தாபனத்தின் அவசர கொள்வனவுக்காக இந்தப் பணம் தேவைப்படுவதனால் இந்தப் பணத்தினை நிலையான வைப்பொன்றில் வைப்புச் செய்யப்படவில்லை.<br>கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. பிரதான நடைமுறைக் கணக்கில் (2323265) இல் வங்கி மேலதிகப் பற்று வட்டி செலுத்த நேரிட்டமை.<br>நேஷன் டிரஸ்ட் வங்கியில் நடைமுறைக் கணக்கின் பணம் 2023 ஏப்ரல் மாதம் மக்கள் வங்கியின் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. | நிதிக் கட்டுப்பாடு மேற்கொள்வதற்காக முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாமல் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 17,761,729 தொகை விளைவற்று நிதி வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிக் கூற்றுக்களின் படி அட்டுறுச் செலவுகள் ரூபா 322,659,847 தொகையாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 223,507,075 தொகைக்கான அட்டுறுச் செலவுகளுக்குரிய அட்டவணைகள் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும், இந்த அட்டுறுச் செலவுகளில் பல வருட காலம் முதல் காணப்படும் ரூபா 228,606,286 தொகைக்கான மீதியும் அடங்கியிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. ரூபா 841,819 தொகை ஒப்பந்த ஊழியர் சம்பளப் பதிவேடு வழங்க முடியும். | அட்டுறுச் செலவுகளுக்கான காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ரூபா 222,665,256 தொகைக்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் (வரிக்கு முன்னர்) ரூபா 236,388,563 இற்கான நட்டம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப ஆண்டிற்கான இலாபம் ரூபா 11,487,241 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 247,875,804 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவுக்கு அரச மானியம் கிடைக்கப்பெறாமை முக்கியமான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு விற்பனை வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 49,243,983 இனால் அதிகரித்திருந்ததுடன், நிருவாகம், வினியோகம் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 22,056,072 தொகையினால் குறைந்திருந்தது. இந்த நிலைமையிலும், மீளாய்வாண்டின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 119,224,883 இனால் பின்னடைவு ஏற்பட்டிருந்தமையால் (அரச மானியம் இன்றி) திறைசேரியின் அல்லது அரசின் ஏனைய நிதி உதவியொன்று இன்றி கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்வதில் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதென அவதானிக்கப்பட்டது.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நடைமுறை விகிதாசாரம் 1.04 முதல் 0.6 வரையும் திடீர் விகிதாசாரம் 1 முதல் 0.56 வரை பாரிய பின்னடைவொன்றை காட்டியிருந்தது. நடைமுறை சொத்துக்களில் அடங்கிய கடன்பட்டோரில் 10 வருடங்களை விட பழைய உள்நாட்டு கடன்பட்டோர் ரூபா 31,873,561 தொகையும், வெளிநாட்டுக் கடன்பட்டோர் ரூபா 63,114,642 தொகையும், நடைமுறை பொறுப்புக்களில் அட்டுறுச் செலவுகளில் பல வருட காலமாக காணப்படும் ரூபா 228,606,286 தொகை அடங்கியிருந்தது. மேலும், தேறிய தொழிற்படு மூலதனம் ரூபா 21,143,543 இற்கான நேர் பெறுமதியொன்றில் இருந்து ரூபா 282,878,479 இற்கான மறைப் பெறுமதி ஒன்றிற்கு குறைவடைவதனால் கூட்டுத்தாபனம் குறுகிய கால தீர்த்தல் தொடர்பாக சிக்கலுக்கு முகங்கொடுத்திருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது செயற்பாட்டு இலாப விகிதாசாரம் மறை 52.05 முதல் மறை 33.89 வரை சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், விற்பனவு வருமானம் 7.78 சதவீதத்தினால் அதிகரித்தலும், நிருவாகச் செலவு 6.19 சதவீதத்தினால் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் 1.16 சதவீதத்தினால் கீழிறங்குவதற்கு காரணமாக இருந்தது. மேலும் கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக செயற்பாட்டு நட்டம் அடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) (i) கூட்டுத்தாபனத்தின் முன்பக்க புதிய கட்டிடம் 2022 செப்தம்பர் 01 திகதி குத்தகை காணி உறுதியொன்றின் மூலம் சிறப்பு அங்காடி தொடர் கட்டிடம் ஒன்றிற்காக 20 வருட காலப் பகுதிக்காக ரூபா 1,014,090,300 தொகை பெறுமதிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக ஒரு செய்தித்தாளில் மாத்திரம் விளம்பரம் வெளியிட்டிருந்தது. தற்போது ரூபா 3 மில்லியன் ஆரம்ப வாடகைக்கு வழங்கியிருந்த இந்த கட்டிடம் மற்றும் வாகனத் தரிப்பிடத்திற்காக பெற்றிருந்த பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையில் கட்டிடத்தின் மற்றும் வாகன தரிப்பிடம் சதுர அளவு எவ்வளவு என காட்டப்படாமல் மாதாந்தம் ரூபா 2 மில்லியனிற்கு வழங்க முடியும் என மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. எனினும், செய்தித்தாள் விளம்பரத்தில் காட்டப்பட்டிருந்தது 10 பர்சஸ்கள் என மாத்திரமே. கணக்காய்வு மற்றும் நிறுவனத்தின் | கணக்காய்வு அவதானிப்பு சரியானது. கூட்டுத்தானத்தில் காணப்படும் நிதி நிலைமையை அடிப்படையாக கொண்டு அரச நிறுவனம் ஒன்றான லேக் ஹவுஸ் நிறுவனத்தின் Sunday Observe மூலம் ஞாயிறு செய்தித்தாளில் இந்த விளம்பரத்தை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த அலுவலும் கடன் அடிப்படையிலேயே நடைபெற்றது. இது தவிர கூட்டுத்தாபனத்தின் இணையதளத்தில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டது. | சரியான பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், கூட்டுத்தாபனத்தில் நட்டம் ஏற்படாதவாறு செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்களினால் 2023 ஜூன் 02 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த இடப் பரிசோதனையின் அவதானிப்பின் படி இந்த எண்ணிக்கை 123.06 பர்சஸ்கள் என உறுதிப்படுத்தப்பட்டமையால் செய்தித்தாள் விளம்பரத்தில் குறைந்த சதுர எண்ணிக்கை ஒன்று காட்டப்பட்டிருந்தமை, சரியான பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை ஆகிய காரணங்களினால் கூட்டுத்தாபனத்திற்கு சரியான சதுர எண்ணிக்கையின் படி பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த குத்தகை பெறுமதியை உழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தை இழந்திருந்தது. | | |
| (ii) மேற்கூறிய குத்தகை உடன்படிக்கையில் கூட்டுத்தாபனத்திற்கு பிரதிகூலமான முறையில் காணப்படும் 6(g) பிரிவின் படி கிடைக்கக் கூடிய மாதாந்த குத்தகை வருமானத்தின் பகுதியொன்று பெறுமதி கூட்டிய வரிக்காக ஒதுக்குவதற்கு நேரிட்டிருந்தமையால் (பெறுமதி கூட்டிய வரி மீது வரி 15% என முன்வரும் ஆண்டுகளில் மாற்றம் அடையாதது என கணித்தால்) உடன்படிக்கைக் காலம் முடிவடையும் 2042 ஆண்டிளவில் கூட்டுத்தாபனத்தின் குத்தகை வருமானத்தில் ரூபா 132,272,648 தொகை பெறுமதி கூட்டிய வரி என | கணக்காய்வு அவதானிப்பு சரயானது. | குத்தகை உடன்படிக்கையை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| செலுத்த நேரிடுவதால் அந்த குத்தகை வருமானத்தை கூட்டுத்தாபனத்திற்கு இழக்க நேரிடும் ஆபத்து நிலைமை காணப்பட்டது. | | | |
| (iii) இந்த உடன்படிக்கையின் படி கிடைத்திருந்த முற்பணத் தொகை ரூபா 72 மில்லியன் எனினும், 6(g) பிரிவின் காரணமாக ரூபா 9,391,304 இற்கான தொகையொன்று பெறுமதி கூட்டிய வரி என ஒதுக்கப்பட்டிருந்தத, உடன்படிக்கையில் 3(ii)a பிரிவின் படி இந்த முற்பணம் மாதாந்தம் ரூபா 600,000 தொகை வீதம் 120 மாதாங்களில் குத்தகை தொகைக்கு பிரதியீடு செய்வதற்காக இணங்கியிருந்த போதிலும் கணக்கீடு செய்யப்பட்ட மொத்த முற்பணம் ரூபா 62,608,696 இற்கான தொகையொன்றாக காணப்பட்டமையால், ரூபா 600,000 வீதம் 120 தவணைகள் ஒதுக்குதல் சிக்கல் தன்மையில் காணப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பு சரயானது. | | குத்தகை உடன்படிக்கையை திருத்திக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய பிரதான அலுவலகத்தின் பிரதான பரிமாற்ற கம்பம் மற்றும் நுண் அலைவரிசை கம்பம் ரூபா 4,605,256 தொகைக்கு திருத்த வேலை மேற்கொள்வதற்காக 2019 நவம்பர் 06 திகதி பெறுகை குழுவின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், 2023 ஏப்ரல் 30 திகதி அளவிலும் திருத்த வேலை மேற்கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாக, நிறுவனத்தினால் ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தும் | கணக்காய்வு அவதானிப்பு சரயானது. | | விரைவாக திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆபத்து நிலைமை ஒன்றினை அடைந்திருந்தது. | | |
| (இ) | 2004 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை கூட்டுத்தாபனத்திடம் காணப்பட்ட ரூபா 16,980,329 தொகை பெறுமதியான நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழின் பெறுமதி காலவதியாக முன்னர் பதிலீடு செய்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரயானது. | நிறுத்தி வைத்தல் வரி வருமானத்தை பிரதியீடு செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனம் 2012 ஆண்டின் பின்னர் திறைசேரி ஏற்பாடுகள் கிடைக்க முன்னர் தொடர்ச்சியாக நட்டம் அடைந்திருந்ததுடன், மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரி ஏற்பாடுகள் கிடைத்தமையால் அந்த நட்டத்தினை குறைத்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. 2021 ஆண்டில் திறைசேரி ஏற்பாடுகள் கிடைக்க முன்னர் ரூபா 333.5 மில்லியனிற்கான நட்டம் ரூபா 345 மில்லியனிற்கான ஏற்பாடுகள் கிடைத்ததனால் ரூபா 11.5 மில்லியன் இலாபம் ஒன்றாக மாறியிருந்ததுடன், 2022 ஆண்டின் போது திறைசேரியின் ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் அந்த நட்டம் ரூபா 236.4 மில்லியனாகியது. இதற்காக ஏனைய வருமான வழிகள் மூலம் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் அபிலாசையுடன் கூட்டுத்தானத்தின் கட்டிடங்கள் மற்றும் காணிகளை வாடகைக்கு கொடுப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும், கூட்டுத்தாபனத்தின் முக்கிய கருமமான ஒலி பரப்பு கால விற்பனையை அதிகரிப்பின் மூலம் நிதி நிலைமையை அதிகரிப்பதற்காக, இந்த தாபன மற்றும் நிருவாகச் செலவுகளை கட்டுப்படுத்தி மீண்டும் இலாபம் பெறும் நிலைமைக்கு | குறை பயன்பாட்டுச் சொத்துக்களை பயன்படுத்தி அரசுக்கு செலவுப் பொறுப்பொன்று இன்றி பங்கிலாபம் வழங்கும் நிறுவனம் ஒன்றாக முன்னேறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆண்டின் புதிய கட்டிடத்தின் பகுதியொன்று குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. திருகோணமலை குச்ச வேலி காணியில் சூரிய சக்தி செய்திட்டமொன்றுக்காக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நுவரெலியா விடுதியை ஒன்றினைப்புடன் பேணிச் செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பல வருட காலமாக நிறுவத்திற்கு கிடைக்கப் பெறாமல் இருந்த மொறட்டுவ பல்கலைகழகத்திலிருந்து அறவிப்பட வேண்டியிருந்த ரூபா 125 மில்லியன் தொகையினை | ஏனைய வருமான வழிகளின் மூலம் வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பாக கூட்டுத்தாபனத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் பங்குகள் கொள்வனவு செய்வதற்காக வெகுசன ஊடக அமைச்சதின் கோறிக்கையின் மீது 1993 ஆண்டின் போது ரூபா 1,000,000 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 1993 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை பங்கிலாப வருமானம் ஏதும் கிடைத்திருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்குகின்றேன். | முதலீடு தொடர்பாக கண்டறிந்து நலன்களை பெற்றுக்கொள்வதற்காக செயற்பட வேண்டும். |
| (இ) | 2007 மே 11 திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 2007/09 படி 67 வயதை பூர்த்தி செய்துள்ள எவரையேனும், மீண்டு அரச சேவையில் அங்கீகரிப்பட்ட பதவியணி ஒன்றில் பதவியொன்றுக்காக நியமனம் செய்யக் கூடாது எனினும் கூட்டுத்தாபனத்தினால் தற்போது 68 வயது மற்றும் 81 வயதை அடைந்துள்ள இரண்டு நபர்கள் நியமனக் கடிதம் வழக்கப்படாமல் 2010 ஆண்டு முதல் இது வரை சாட்டுதல்கள் அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஜுன் 29 திகதிய நடைபெற்ற கூட்டுத்தாபனத்தின் சபை கூட்ட இலக்கம் 03/2020 (ii) தீர்மான இலக்கம் 04.03 இன் படி அனைத்து விற்பனை நிறைவேற்றுனர்களின் மாதாந்த இலக்கு வருமானம் ரூபா 3 மில்லியன் வரை அதிகரிக்கப்பட வேண்டியிருந்ததென கூட்டுத்தானத்தின் சபை தீர்மானித்திருந்த போதிலும், 2022 ஒக்தோபர் நவம்பர் மாதங்களில் விற்பனை உத்தியோகத்தர்களின் விற்பனவு இலக்குகள் 3 மில்லியன் ஆக இருக்கவில்லை. அதேபோல் 2022 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்த இலக்கினை அடைவதற்காக 15 உத்தியோகத்தர்களில் 12 பேருக்கும் இயலாமல் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | கூட்டுத்தாபனத்தின் சபை கூட்ட இலக்கம் 03/2020 (ii) தீர்மான இலக்கம் 04.03 இன் படி செயற்பட வேண்டும். |
| (உ) | 2022 ஆண்டிற்கான பாதீட்டடு விற்பனை வருமானம் ரூபா 1,040,210,000 தொகையாக காணப்பட்டதுடன், 2022 ஆண்டின் உள்ளவாறான விற்பனை வருமானம் ரூபா 682,086,556 தொகையாக இருந்தது. அதன்படி, | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | பாதீட்டு வருமானத்தை அடைந்துகொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாதீட்டு வருமானத்தில் ரூபா 358,123,444 தொகையினை நெருங்குவதற்கு கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் பிரிவிற்கு முடியாமல் இருந்தது. அந்த எண்ணிக்கை பாதீட்டு விற்பனை வருமானத்தில் 34% ஆகும். | | |
| (ஊ) | நிதிக் கூற்றுக்களின் படி 2022 ஆண்டிற்கு முன்னர் பெற வேண்டிய மீதி ரூபா 163,164,250 தொகை எனினும், ரூபா 12,890,287 இற்கான கடன்தொகையை அறவீடு செய்தல் தொடர்பாக மாத்திரம். | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரிமை காணப்படாத காணியொன்றில் 2018 ஆண்டில் ரூபா 5,830,890 தொகை செலவொன்று மேற்கொண்டு மலையக சேவைக்குரிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்த காணியை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 30 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியிருந்த காணியில் இந்தக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் புஷ்பதான வித்தியாலயத்தினால் இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியை வழங்கும் படி மேற்கொள்ளப்பட்ட கோறிக்கை தொடர்பாக வெகுசன ஊடக அமைச்சு, புஷ்பதான வித்தியாலயாம், கண்டி காணி ஆணையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுடன் வெகுசன ஊடக அமைச்சில் கூட்டமொன்று நடைபெற்றதுடன், அது தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுக்கப்படாமல் 06 மாத காலங்களுக்காக ஒத்தி வைக்கப்பட்டது. | காணியை சட்டரீதியாக உரித்தாக்குவதற்கு அல்லது முறையாக தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் பகுதி II பந்தி 5.1 இற்கு இணங்க அனைத்து அரச நிறுவனங்களும் தமது நிறுவனங்களினால் சேவைகளுக்காக அறவீடு செய்யும் கட்டணத்தினை மீளாய்வு செய்து மூன்று வருடங்களுக்கு ஒருமுறை 15 சதவீத உச்சமட்டத்தின் கீழ் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அதற்கு இணங்க செயற்படாமையால் மீளாய்வாண்டின் போதும் ரூபா 102,312,983 தொகை வரை கட்டண வருமானம் பெற்றுக்கொள்வதற்காக | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. 2020,2021 மற்றும் 2022 ஆண்டுகளில் கட்டண அதிகரிப்பு மேற்கொண்டிருக்கவில்லை. 2020 ஆரம்பத்தில் உலகில் ஏற்பட்டிருந்த கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக நிறுவனத்தை நடாத்திச் செல்லல் தவிர வருடாந்த கட்டண அதிகரிப்பு அல்லது விஷேட செயற்பாடுகள் நடைபெற்றிருக்கவில்லை. 2023 மார்ச் 31 திகதி வரையும் கட்டணத்தை 20 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எடுத்திருக்கவில்லை. | |
| (ஐ) | வாடிக்கையாளர்கள் நிகழ்ச்சி முன்னர் பணம் செலுத்திய சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ள முடியாமல் போன சந்தர்ப்பங்களில் அதற்காக 2015 ஆண்டு முதல் கிடைத்திருந்த ரூபா 37,402,395 தொகை ஒலிபரப்பு கால கடன்கொடுத்தோர் என காணப்பட்டதுடன், அந்தப் பணத்தினை பொருத்தமான விதத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டு அனைத்து முற்பெறுவனவுகளுக்காக ஒலி பரப்பு கால வருமானம் வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகைக்காக 2023 ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்காத சந்தர்ப்பங்கள் தொடர்பாக கிடைத்திருந்த பணம் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | ஹோமாகம பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் வானொலி பரிமாற்ற நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக கிடைத்திருந்த 149 ஏக்கர் 2 ரூட் 22 பர்சஸ் காணி கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்கும் சான்றிதழின் அட்டவணைக்கு ii இற்கு இணங்க "காணி வானொலி பரிமாற்ற நிலையமொன்று நிறுவுவதற்காக மாத்திரம் உரித்தாக்கப்படுகின்து" என குறிப்பிடப்பட்டிருந்தமையால் இந்தக் காணியை வேறு கருமங்களுக்காக ஈடுபடுத்த முடியாது எனவும், குறிப்பிட்ட கருமத்திற்கு புறம்பாக பயன்படுத்தப்பட்டால் காணியை திருப்பி ஒப்படைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் அந்த குறிக்கோளுக்கு புறம்பாக 2007 திசெம்பர் 17 திகதி மொறட்டுவ பல்கலைகழத்தின் தொழில் நுட்ப விஞ்ஞான பீடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 25,000,000 தொகை முற்பணமொன்று பெற்றுக்கொண்டிருந்தது. | 2007 ஆண்டின் பின்னரான கணக்குகளை பரிசோதனை செய்து தவறுதலாக கணக்கீடு செய்யபட்டிருந்ததால், பரிசோதனை மேற்கொண்டு அது தொடர்பாக 2023 ஆண்டில் கணக்குகள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட கருமங்களுக்கு புறம்பாக ஈடுபடுத்தக்கூடாது. |

## 3.3 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 இற்கும் 2019 இற்கும் இடைப்பட்ட காலத்தில் கூட்டுத்தாபன சேவையிலிருந்த ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை | ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடம் கூட்டுத்தாபனத்திற்கு பெற வேண்டிய தொகையை அறவீடு |

| | | |
|---|---|---|
| வேண்டியுள்ள ரூபா 2,236,895 தொகையினை அறவீடு செய்வதற்கு 2023 மே 31 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுத்தாபனத்தின் தோட்ட நிருவாகிப் பதவியில் கடமை புரிந்த 2021 திசெம்பர் 10 திகதி 60 வருடங்கள் பூர்த்தியாகியமையால் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் 2021 திசெம்பர் 13 திகதி முதல் அவரை சாட்டுதல் அடிப்படையில் சேவைக்கு சேர்ப்பதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. 2022 மார்ச் 14 திகதி கூட்டுத்தாபன சபைக் கூட்டத்தில் இந்த உத்தியோகத்தரின் சேவையை சாட்டுதல் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியின் பிரதிநிதி கொள்கை ரீதியாக இணங்கியிருக்காததுடன் வெகுசன ஊடக அமைச்சின அவதானிப்பாளரும் அதற்காக இணங்கியிருக்கவில்லை. எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தினால் இந்த உத்தியோகத்தரின் சேவையை சாட்டுதல் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கியருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை | சேவையினை சாட்டுதல் அடிப்டையில் பெற்றுக்கொள்வதற்கா சட்ட ஏற்பாடுகளின் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) 01 பதவி மாத்திரம் அடங்கியிருந்த போதிலும், 2021 ஜூன் 01 திகதி முதல் 2022 மே 31 திகதி வரையான காலப் பகுதியில் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) பதவியில் நிரந்தர அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இரண்டு | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு முரணாக கூட்டுத்தாபனத்தினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன்படி, கூட்டுத்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பதவிக்காக இரண்டு உத்தியோகத்தர்களுக்காக அந்த காலப் பகுதியில் செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 3,872,920 தொகை காணப்பட்டது. மேலும், பணிப்பாளர் (சந்தைப்படுத்தல்) என கடமையாற்றிய உத்தியோகத்தர் சந்தைப்படுத்தல் பிரிவின் கடமைகளில் இருந்து 2021 ஜூன் 01 திகதி முதல் 2021 ஜூன் 27 திகதி வரை விடுவிக்கப்பட்டிருந்த காலப் பகுதிக்காக வேறு கடமைகள் சாட்டுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காத போதிலும் அவரின் ஜூன் மாத சம்பளம் என ரூபா 182,505 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | கூட்டுத்தாபனத்தின் பதவியணியின் மூன்றாம் மட்டம், இரண்டாம் மட்டம் மற்றும் ஆரம்ப மட்டப் பதவிகளுக்காக முறையே ஊழியர்கள் 57 95, மற்றும் 61 என மிகை ஊழியர் எண்ணிக்கையொன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட பொது முயற்சிகள் செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 இற்கு | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. 2021 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை அச்சிடப்பட்டு | செயற்பாட்டுக் கைநூலின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட |

| | | |
|---|---|---|
| இணங்க கணக்கு ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு நிதிக் கூற்றுக்கள் 10 நாட்கள் தாமதத்துடன் 2023 மார்ச் 10 திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், வரைபு வருடாந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வருவதுடன், மே மாதம் 31 திகதி சமர்ப்பிப்பதற்கு இயலுமாக இருக்கின்றது. | வேண்டும். |

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 நவம்பர் 25 திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 2022 திசெம்பர் 31 திகதியல் உள்ளவாறு முன்னேற்றத்தை கவனத்தில் எடுத்த போது செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 22 பிரிவுகள் அடங்கியிருந்ததுடன், 14 பிரிவுகளினால் முன்னேற்றம் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் சந்தைப்படுத்தல் பிரிவினால் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் குறிக்கோளுடன் அறிமுகப்படுத்தியிருந்த 17 நிகழ்ச்சிகள் நடாத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |